**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 28/ 2023**

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | ராமசாமி | Taluk | |
| Father's Name | பாலகிருஷ்ணன் | Village | |
| Age | | Calling | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 20.08.2025.**

1, 3, 4, 5 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1) நான் HDFC வங்கி, கரூர் கிளையில் Operation Manager ஆக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் 1வது எதிரி 11.05.2018 ம்தேதியன்று எங்கள் வங்கி கிளையில் பணிபுரிந்தாரா இல்லையா என்பதற்கான விவரம் கேட்டு அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்ய கோரப்பட்டிருந்தது. 2018 காலகட்டத்தில் எங்கள் வங்கி கிளையில் வருகை பதிவேடு Manual ஆக பராமரிக்கப்பட்டுவந்தது. 2018 வரையான வங்கி ஆவணங்களை சென்னையில் வங்கி ஆவணங்கள் சேகரிக்கும் நிறுவனமான writers information என்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தில் இருந்து 11.05.2018 ம்தேதிக்கான வருகை பதிவேட்டை கேட்டு தபால் வைத்துள்ளோம். ஆனால் பதில் கிடைக்கவில்லை. 2020 ம் ஆண்டில் இருந்து தான் வங்கி ஊழியர்களின் வருகையை கணினியில் பராமரித்து வருகிறோம். Manual ஆக பராமரிக்கப்பட்டுள்ள வருகை பதிவேட்டில் வங்கி ஊழியர் எத்தனை மணிக்கு வந்துள்ளார் என்றும், எத்தனை மணிக்கு வங்கியில் இருந்து வெளியே சென்றுள்ளார் என்ற விவரமும் பதிவு செய்யப்படவில்லை.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

(சாட்சி சென்னை நிறுவனத்தில் இருந்து பதில் கிடைத்ததால்தான் வருகை பதிவேட்டை பற்றி மேற்கொண்டு சாட்சியம் அளிக்க முடியும் என்பதால் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/-ராமசாமி

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.